விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 084 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 29 வியாழக்கிழமை (13.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மருத்துவருக்கு நீதி கோரி
# அநுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் திருமணமாகாத பெண் மருத்துவர் மீது நபர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அநுராதபுரம் போதனா

15ஆம் பக்கம் பார்க்க



## வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள
# கட்டுப்பாடுகள் ஓரிரு ஆண்டுகளில் தளர்த்தப்படும்

(கொழும்பு)

வாகனங்களுக்கு விதிக் கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இன்னும் ஓரிரு ஆண்டு களில் தளர்த்தப்படும் என்று கைத்தொழில் பிரதி அமைச் சர் சதுரங்க அபேசிங்க தெரி வித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக் குக் கருத்துத் தெரிவிக்கும் போதே பிரதி அமைச்சர்

15ஆம் பக்கம் பார்க்க

## பெண் வைத்தியர் வன்கொடுமை எதிரொலி
# நாடு முழுவதும் முடங்கியது வைத்தியசாலை சேவைகள்

(கொழும்பு)

அநுராதபுரம் போதனா வைத் தியசாலையில் பெண் வைத்தி யர் ஒருவர் வன்கொடுமை செய்யப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் உள்ள வைத்தியர்கள், தாதி யர்கள், மருத்துவப் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதால் வைத்தியசாலை சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

(03ஆம் பக்கம் பார்க்க)



## நிமோனியாவால்
# ஏழாலையில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நிமோனியாத் தொற்றுக் காரணமாக ஏழாலை வடக் கில் ஒருவர் மரணமடைந் துள்ளார்.

இதில் நல்லதம்பி குண தாஸ் (வயது-66) என்பவரே

15ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில்
# மோ.சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிள் மோதி யதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## அநுராதபுர விவகாரம்
# கைதானவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்



### சபையில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

அநுராதபுர போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியரை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## வேலைநிறுத்தப் போராட்டத்தை வைத்தியர்கள் கைவிட வேண்டும்

### சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை



(கொழும்பு)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பிக் கப்பட்டுள்ள வைத்திய தொழிற்சங்க நட வடிக்கையை

15ஆம் பக்கம் பார்க்க

# சந்தேகநபரை உடனடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்துக

## அநுராதபுரம் நீதவான் உத்தரவு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் வைத்திய சாலையில் பெண் மருத்து வரை துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபரை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்து மாறு அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜெய சூரிய, அநுராதபுரம் தலைமை பொலிஸ் ஆய்வாளர் ஆர். என்.கே.ஜெயவீரவுக்கு, நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## சண்டிலிப்பாயில்
# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வடக்கில் குடும்பஸ்தர் ஒருவரது சட லம் நேற்று மீட்கப்பட்டுள் ளது.

இதில் அதேயிடத்தைச்

15ஆம் பக்கம் பார்க்க

## சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தின்
# நிர்மாணப் பணிகள் ஏப்ரல் மாதம் ஆரம்பம்

### அடிக்கல்நாட்டு விழாவில் மோடி பங்கெடுப்பார்

(கொழும்பு)

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்கான நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்

15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னே கூட்டணி தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் - விக்னேஸ்வரன்

தங்களுடைய தனித்துவத்தை இல்லாமலாக்கும் முயற்சியில் பிற கட்சிகள் செயற்பட்டமையினாலேயே இம் முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தங்களது கட்சி தனித்துப் போட்டியிடுவதற்குத் தமிழ் மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் எந்தக் கட்சியுடன் இணைவது என்பது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ம-7)


## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு

செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்
ரூபா 9999/- மட்டுமே
செலுத்தி செவிப்புலன்
கருவி ஒன்றினை
உங்களுடையதாக்கிக்
கொள்ளுங்கள். வீட்டிற்கே
வந்து பரிசோதித்து
வழங்குகின்றோம்.
முற்பதிவு செய்ய மற்றும் மேலதிக
விபரங்களுக்கு அழையுங்கள்



**077 434 6245**

(923)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 10 - 1958 | 11 - 03 - 2025 |

### செல்வி ரதிகா செல்வரத்தினம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரதிகா செல்வரத்தினம் அவர்கள் (11.03.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - பத்மவாசா தம்பதிகளின் சிரேஷ்ட மகளும் ரேணுகாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயவர்மனின் மைத்துனியும் லரூசனின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2025) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 15, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
திருமதி ரேணுகா விஜயவர்மன்

(C-2450)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 21.12.1955
மறைவு 12.03.2025

எமது பிரதேச செயலகத்தின் நிதிக்கிளை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி **இரத்தினகுமார் புவிப்பிரபா** அவர்களுடைய அன்புத் தந்தையார்

### அமரர் செல்வராசா இரத்தினகுமார்

அவர்கள் 12.03.2025 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-2454)

## புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவும் கிளைப் பொதுச் சபைக் கூட்டமும் தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு. கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 16 கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

**கிளைப்பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2025.03.15 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொ.இல | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | ஊரதீவு | திரு. இராஜசிவம் தனுசன் | புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயம் |
| 02 | 02 | மடத்துவெளி | திரு. ஜோசப் ஜெகதாஸ் | புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயம் |
| 03 | 03 | மாவுத்திடல் | திரு. கந்தசாமி சசிகரன் | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 04 | 05 | தல்லைப்பற்று | திரு. சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 05 | 06 | தல்லைப்பற்று தெற்கு | திரு. கணேசு சுரேஸ்பாபா | புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 06 | 07 | மணற்காடு | திருமதி தர்சினி புவிராஜ் | புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க அ.த.க.பாடசாலை |
| 07 | 09 | புங்குடுதீவு மத்தி | திருமதி இமெல்டா சிறிக்குமரன் | புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க அ.த.க.பாடசாலை |
| 08 | 10 | பெருங்காடு | திரு. பாலசுப்பிரமணியம் பாலவரதன் | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளீர் வித்தியாலயம் |
| 09 | 12 | பெருங்காடு தெற்கு | திரு. சற்குணசிங்கம் பிறேமிலன் | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளீர் வித்தியாலயம் |
| 10 | 13 | குறிகட்டுவான் | திரு. வல்லிபுரம் நிதர்சன் | புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளீர் வித்தியாலயம் |
| 11 | 14 | கணேஷா | திரு. சிவானந்தன் அருணோதயன் | புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையம் |
| 12 | 15 | இறுப்பிட்டி | திரு. சபாரத்தினம் அருள்நாதன் | புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் |
| 13 | 16 | அரியநாயகம்புலம் | திரு. மயில்வாகனம் கபிலன் | புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம் |
| 14 | 18 | நயினாதீவு மத்தி | திரு. சுந்தரலிங்கம் அகிலன் | நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 15 | 19 | நயினாதீவு தெற்கு | திரு. ஜெயபாலன் சதீஸ் | நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம் |
| 16 | 20 | நயினாதீவு வடக்கு | திரு. வடிவேல் கிருஷாந் | நயினாதீவு மகா வித்தியாலயம் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல. 857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

07.03.2025

ஒப்பம் - திரு.கி.சந்திரசேகரன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியர் வன்கொடுமை விவகாரம்

# பணிப்புறக்கணிப்பில் குதித்த அரச வைத்திய அதிகாரிகள்

## நோயாளர்கள் அவதி

(அநுராதபுரம்)

**அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் விடுதியில் 32 வயதான பெண் வைத்தியர் ஒருவர் கத்தி முனையில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தை எதிர்த்து அதற்கு நீதி கோரியும் வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் நாடளாவிய ரீதியில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.**





அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்ட போதிலும், நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்பை கைவிடப்போவதில்லையென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த இந்தப் பணிப் புறக்கணிப்பு இன்று காலை 08.00 மணி வரை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, வவுனியா பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு வைத்திய சாலை, கிளிநொச்சி பொது வைத்தியசாலை வைத்தியர்களும் நேற்று பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதுடன் சிகிச்சை பெற முடியாத நிலையில் மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டதால் நோயாளர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். (நி-8-33-250-299-316)

## ‘சீர்மியம்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆ.ஜென்சன் றொனால்ட் இன் ‘சீர்மியம்’ சிறுகதை நூல் வெளியீட்டு விழா கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை காரியாலய மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி த.துஷ்யந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமுதாய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி ஜேசபின் திருமகள் சிவசங்கர், சிறப்புவிருந்தினராக உளவளத்துணையாளர் அ.அஜந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

## வைத்தியர் துஷ்பிரயோகம் சந்தேக நபர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியரை வன்கொடுமை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் நேற்றுக் காலை கல்னேவப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்காக 5 பொலிஸ் குழுக்கள் மற்றும் 45 சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வைத்தியரை பலாத்காரம் செய்த பின்னர், சந்தேக நபர் அவரது இரண்டு தொலைபேசிகளில் ஒன்றைத் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

வைத்தியரின் தொலைபேசி ஏதோ ஒருவகையில் இந்த சந்தேக நபரைக் கைது செய்வதற்கு சான்றாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கல்னேவவில் மறைந்திருந்தபோது சந்தேக நபரை அதிகாரிகள் கைது செய்தனர்.

இதற்கு முன்னர் இந்த சந்தேகநபர் கெக்கிராவ பகுதியில் நடந்த 4 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வழக்கு ஒன்று தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த சந்தேக நபர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நபர் இராணுவத்திலிருந்து சட்ட விரோதமாக விலகியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

## அநுராதபுரம் வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் திடீர் விஜயம்



(அநுராதபுரம்)

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அநுராதபுரம் வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெண் வைத்தியர்களின் விடுதிக்குள் நுழைந்த நபரொருவர் பெண் வைத்தியர் ஒருவரை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

பெண் வைத்தியர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான முன்னாள் இராணுவ வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

பெண் வைத்தியர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்தியக்குழுவிடம் விசேட கலந்துரையாடலை நடத்தியுள்ளார். (நி-8)

## பாடசாலைகளுக்கு விடுமுறை

## வெளியானது அறிவிப்பு



(கொழும்பு)

2025 அரச மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான விடுமுறை தொடர்பான அறிவிப்பு கல்வி அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதல் கட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அத்தோடு, முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கிண்ணத்தை சுவீகரித்தது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி யாழ்.மாவட்ட பாடசாலை களுக்கிடையில் பிரித்தானியா தமிழ்ப் பாடசாலைகளின் அமையத் தின் அனுசரனையுடன் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டது.

யாழ் மாவட்டத்திற்கு உட்பட்ட 16 வயதுப் பிரிவினருக்கான போட்டி யின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற் றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற் றது.

இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத் திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 28:11 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை பிரதிநிதித்துவம் செய்த ரி.தர்மினி சிறந்த மத்திய பிரதேச (Center) வீராங்கனை யாகவும், ஆர்.கிருத்திகா சிறந்த பேற்றுக்கு எய்யும் (G.S) விராங்க னையாகவும், ரி.அபிநயா சிறந்த பேறுகாப்பாளராகவும் (G.K) ஏ.டினுயா வலைப்பந்தாட்ட 16வயதுப் பிரிவு ராணியாகவும் (Net ball Queen) தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

## விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி



கே.சீ.சீ.சீ அணி



யாழ்.பல்கலைக்கழக அணி


வளர்மதி விளையாட்டுக்கழகம் வருடா வரும் (30 ஆண்டுகள்) நடத்தி வரும் 30 பந்து பரிமாற் றங்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் கே.சீ.சீ.சீ, யாழ்.பல்கலைக்கழக அணிகள் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

இப்போட்டிக்கு பிரதம விருந்தின ராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சிவபாலன் கலந்து கொள்ள வுள்ளார்.

கே.சீ.சீ.சீ அணி 1 ஆவது லீக் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியிடம் 96 ஓட்டங்களால் தோல்வியும், 2 ஆவது லீக் போட் டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணியை 51 ஓட்டங்களால் வெற்றியடைந்து play off சுற்றுக்கு தகுதி பெற்று play off சுற்றில் விலகல் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 7 இலக்குகளால் வெற்றியும், 2nd qualifier போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக அணி லீக் சுற்றில் 1 ஆவது போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணியை 72 ஓட்டங்களால் வெற்றியும் லீக் சுற் றில் 2 ஆவது போட்டியில் கே.சீ. சீ.சீ அணியை 96 ஓட்டங்களால் வெற்றியும் play off சுற்றில் 1 ஆவது qualifier I இல் பற்றீசியன்ஸ் அணியை 62 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள் ளனர். (6-8)

## தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் இலங்கையில்






2025 ஆம் ஆண்டுக்கான தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு சம்பியன்ஷிப் தொடரை நடத்தும் உரிமை இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேள னத்தின் (FFSL) தலைவர் ஜஸ்வர் உமரின் முறையான கோரிக்கை யைத் தொடர்ந்து, SAFF தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளால் இத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை இறுதியாகக் கடந்த 2008 ஆம் ஆண்டு SAFF தெற்காசியக் கால்பந்து கூட்டமைப்பு சம்பியன்ஷிப் தொடரை நடத்தியது. 17 வருட நீண்ட காத்திருப்புக்குப் பின்னர் குறித்த தொடரை நடத்துவதற்கு இலங்கைக்கு மீண் டும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில் குறித்த தொட ரானது எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (6-8)

## மாவட்ட ஹொக்கி சங்கம் நடத்தும் சுற்றுப் போட்டி இன்று

யாழ் மாவட்ட ஹொக்கி சங்கம் நடத்தும் ஜெயசீலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஹொக்கிச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

[illegible] 8.30 மணிக்கு [illegible] கிறிம்சன் அணியை எதிர்த்து கோல்டன் நைட் அணியும் 9.30 மணிக்கு மெமோறியன்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணியும் 10.30 மணிக்கு யூனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ் ஸ்ரார்ஸ் அணியும் 11.30 மணிக்கு ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஓல்ட் ஓல்கோல்ட்ஸ் அணியும் மோதவுள்ளன.(6-8-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஐந்து மணி நேர தூக்கம் அவசியம்

## விசேட மனநல மருத்துவர் அறிவுறுத்து

(கொழும்பு)

**க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் நித்திரை கொள்வது மிகவும் முக்கியமென காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.**

தூக்கமின்மை நினைவாற்றலைப் பாதிக்கும். ஏனைய மாணவர்களை விட சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பரீட்சைக்கு தோற்றவுள்ள தமது பிள்ளைகளை வற்புறுத்த வேண்டாம் என்றும் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாதாரண தரம் மாணவர் களின் கல்வியின் ஒரு முக்கியமான மைல் கல். இந்த முக்கியமான பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் நல்ல மனநிலையைக் கொண்டிருப்பது மிகவும் அவசியம்.

சில மாணவர்கள் பரீட்சை நெருங்கும்போது பயப்படுவார்கள். இந்தப் பயத்தின் காரணமாக, சில சமயங்களில் படித்த பாடங்களை மறந்து விடுவார்கள். இந்த மறதிகள் தற்காலிகமானவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே பயமின்றி பரீட்சையை எதிர்கொள்ளுங்கள் என்றும் அவர் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

பரீட்சையை எதிர் கொள்ளும் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு முறை மிகவும் முக்கியம். இந்த நேரத்தில் கலவரங்களில் ஈடுபட வேண்டாம். நண்பர்களுடன் பயணங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நல்ல மனதுடன் பரீட்சைக்கு தோற்ற தயாராகுங்கள் என காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்தார். (நி-8)

# தபால் மூல வாக்காளர் விண்ணப்ப காலம் நீடிப்பு




(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று நள்ளரவு 12.00 மணியுடன் நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதி, தபாலில் ஏற்படக்கூடிய கால தாமதங்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கவனத்திற்கொண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்படு வதாக மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# திருமண பந்தத்தில் இருந்து பிரிவதாக ஹிருணிகா அறிவிப்பு

(கொழும்பு)

கணவர் ஹிரானுடனான திருமண பந்தத்தில் இருந்து விலகுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரன் அறிவித்துள்ளார்

நீண்ட யோசனைக்கு பிறகு ஹிரானும் நானும் எங்கள் திருமணத்திலிருந்து பிரிந்து செல்ல முடிவு செய்தோம். இந்த முடிவு பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலுடன் எடுக்கப்பட்டது.

இது இலகுவாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. பல மாதங்களாக நாங்கள் சிந்தித்தோம். ஆனால் இறுதியில் ஒருவருக்கொருவர் சுதந்திரம் கொடுக்க முடிவு செய்தோம்.

நாங்கள் பகிர்ந்து கொண்ட நேரத்திற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றும் அவர் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது (நி-8)

# இராசிபலன்

13.03.2025
மாசி 29, வியாழக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.37 மணிவரை
பூரம் முழுவதும்

சுபநேரம் 7.52- 9.22 மணிவரை
இராகுகாலம் 1.52-3.22 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம் - திருவோணம்

வளவன்


**மேஷம்** வருங்கால நலன் கருதி சேமித்து வைக்க முற்படுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப முயற்சிகளில் ஆர்வம் கூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


**கடகம்** தொலை தூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


**துலாம்** தொலை தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்


**ரிஷபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாடு முன்னேற்றம் தரும், தனவரவில் இருந்த தடைகள் அகலும்.


**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள், அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகும், போசன சுகமுண்டு.


**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உற்சாகமான நாள்.


**கும்பம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், பொருளாராத நிலையில் திருப்தி காண வேண்டிய நாள், பொது வாழ்வில் கௌரவமான சம்பங்கள் இடம் பெறலாம்.


**மிதுனம்** பொல்லாதவர் உங்களை விட்டு விலகுவர், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


**கன்னி** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



**மீனம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

முயற்சி இல்லாத வாழ்வு துடுப்பு இல்லாத படகு போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள்வெட்டு சம்பவம்; குற்றச்சாட்டில் மூவர் கைது

## வாள்கள், ஹெரோயின் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் வாள்கள், 2 அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கொக்குவில் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி இளைஞன் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டில் இளைஞனின் கைவிரல் துண்டாடப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் மூன்று இளைஞர்களை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஹெரோயின் போதைப் பொருள், மூன்று கஜேந்திரா வாள்கள் உள்ளிட்ட ஏழு வாள்கள், 2 அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-33)

# இடமாற்றம் வழங்கக்கோரி ஆளுநருக்கு அரச சாரதிகள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சாரதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு அகில இலங்கை சாரதிகள் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் சாரதிகளில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்குமாறு ஆளுநர் சுகாதாரத் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்தார். (6-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கமும் இரத்ததானச் சங்கமும் இணைந்து நடத்தும் பொன்னம்பலம் நீதிராஜாவின் ஞாபகார்த்த 78 ஆவது இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனுசரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-8)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு அமெரிக்கத் தூதரக குழு விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்குக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் கெவின் பிரைஸ் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடினர்.

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அலுவலர் கெவின் பிரைஸ், அரசியல் நிபுணர்களான நஸ்றின் மரிக்கார் மற்றும் சரித்த பெர்ணாண்டோ ஆகியோரே பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

இந்தச் சந்திப்பின் போது பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர். (6-8-33)

## ஏல விற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து மணல், கல் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# யாழில் கட்டுப்பணம் செலுத்திய தமிழ் காங்கிரஸ்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி நேற்று யாழில் கட்டுப்பணம் செலுத்தியது.

யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்தில் யாழில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் செலுத்தியிருந்தார். (6-8-33)

## மாவட்டச் செயலகத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை யாழ் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக ஊடகப்பிரிவு நேற்று விடுத்துள்ள செய்தி குறிப்பிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவையானவர்கள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்று பயனடையுமாறு யாழ்.மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (6-8)



யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது பல அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களில் ஈடுபட்டனர்.

(படம்: சிவசாந்தன்)

## இசை விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையம் நடத்தும் 'இணுவையூரில் திருவையாறு மார்கழி உற்சவம்' இசைவிழா எதிர்வரும் 21 - 23 ஆம் திகதி வரை இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கில் மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (நி-6-8)

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் கல்லூரியின் தியான அரங்கில் அதிபர் நா.மகேந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.




## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பிரதேச சபைச் செயலாளர் கே.தவராசாவின் கௌரவிப்பு விழா இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கில் இன்று வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 இலட்சம் ஓய்வூதியர்களுக்கு என்ன கிடைக்கும்?


அன்பு ஜவஹர்ஷா

சுமார் 14 இலட்சம் அரசாங்க ஊழியர்களும் 7 இலட்சத்து 40 ஆயிரம் ஓய்வூதியர்களும் இலங்கை சனத்தொகையில் 10 வீதமானவர்கள் ஆவர். இவர்களுக்கு யானைப் பசிக்கு சோளப் பொரிதான் கிடைக்கவுள்ளது என்பதே கடந்த நான்கு வாரங்களாகப் பேசு பொருளாகியுள்ளது. அரசாங்க ஊழியர்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க இறுதி ஆயுதமாக வேலை நிறுத்தத்தை மேற்கொள்வார்கள். ஆனால் ஓய்வூதியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளே கைகொடுக்கும். சில சமயம் காலை வாரி விடுவதும் உண்டு. இந்த குரலற்றவர்களுக்கு இம்முறை வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளில் என்ன கிடைக்கவுள்ளது என்பதைப் பார்ப்போம்.

முதலில் ஒரு விடயத்தை இங்கு தெளிவாகத் தெரிவித்து விட வேண்டும். கடந்த ஒக்டோபர் மாதம் சகல ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்பட்ட 3,000 ரூபாய் படி அதிகரிப்பை விட 2020.01.01 முதல் 2024.12.31 வரை ஓய்வுபெற்ற சுமார் 40,000 பேர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் எந்த நிவாரணமும் இல்லை. ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையில் ஓய்வூதியர்களைப் பற்றி என்ன சொல்லப்பட்டுள்ளது என்று முதலில் பார்ப்போம்.

**அரச துறை ஓய்வூதியங்கள்**

மேலும் அவர்களிற்கு உரித்தான சம்பளம் மற்றும் நன்மைகளை கருத்திற்கொண்டு 2020 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய முரண்பாட்டினை தீர்க்கும் வகையில் ரூபா 3,000 மாதாந்த அதிகரிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டது.

2017.12.31 வரை ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரே சம்பள அளவுத்திட்டத்திலிருப்பதனால் 2020 ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாம் கட்ட சம்பள அளவுத்திட்ட அடிப்படையில் 2016-2020 வரை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியங்களை மாத்திரம் திருத்துவதன் மூலம் ஓய்வூதிய முரண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதை அவதானிக்கின்றேன்.

இப்பிரச்சினை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருப்பதனால் தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அரசிறை ஏற்பாடுகளுக்குள் கட்டம் கட்டமான விதத்தில் இது தீர்க்கப்பட வேண்டும் என்று நான் நம்புகின்றேன். 2020 ஜனவரி 01 இற்கு முன்னர் 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டங்களுக்கு நேரொத்த விதத்தில் 3 கட்டங்களில் திருத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

முதலாவது கட்டமாக 2018 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களினதும் ஓய்வூதியங்கள் 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய மூன்றாம் கட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு அமைவாக திருத்தம் செய்யப்படுவதுடன், 2025 ஜுலையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இக் கட்டத்திற்காக 2025 வரவுசெலவுத்திட்டத்தினூடாக ரூபா 10,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

மேலும் சம்பள மாற்றத்தின் நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களுடன் தொடர்புடைய ஓய்வூதிய மாற்றங்களை முறையே 2026 ஜுலை 2027 ஜுலை தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும் நாம் முன்மொழிகின்றோம். இவ்வாறு வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற முன்னர் அது சட்டமாகி சுற்றறிக்கைகள் வெளியாக முன்னர் இப்படியான விளக்கங்கள் தொடர்பாக பல வேறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். சட்டமாக முன்னர் சட்டமாக உள்ளவற்றை அலசி ஆராய்வதும் ஊடகப் பணியாகும். கற்றறிந்த அரசாங்க ஊழியர்களும், ஓய்வூதியர்களும் அன்னங்கள் போல் பிரித்தெடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் தான் இத்தகைய குறிப்புக்கள் எழுதப்படுகின்றன.

ஏப்ரல் 10 ஆம் திகதி சம்பளம் கிடைக்கும் போது அரசாங்க ஊழியர்களும், ஜுன் 10 ஆம் திகதி ஜுலை மாத ஓய்வூதியம் கிடைக்கும் போது ஓய்வூதியர்களும் உண்மையைத் தெரிந்து கொள்வார்கள்.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட விளக்கத்தின்படி, 95 சதவீதமான ஓய்வூதியர்களுக்கு 2025 ஜுலை, 2026 ஜுலை, 2027 ஜுலை என்ற வகையில் இன்னும் 27 மாதங்களுக்குள் ஏதோ ஒரு வகையில் நிவாரணம் கிடைக்கவுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் போது அதற்கு சமாந்தரமாக ஓய்வூதியமும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தேசியக் கொள்கையாக சட்டமாக்கப்படாத வரையில், ஓய்வூதியர்களுக்கு முழு நிவாரணம் கிடைக்க வழியில்லை. ஆகையால் கிள்ளிப் போடும் பிச்சையையே ஓய்வூதியர்கள் கையேந்திப் பெறும் நிலை உள்ளது.

2016-2019 வரை ஓய்வுபெற்ற சுமார் 1 இலட்சத்து 18 ஆயிரம் பேர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நிவாரணம் கிடைக்கும் என பெரும் எதிர்பார்ப்போடு இருந்த நிலையில், அந்த நிவாரணத்தை சகல ஓய்வூதியர்களுக்கும் 27 மாதம் இடைவெளியில் 3 கட்டங்களாக வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இந்த 1 இலட்சத்து 18 ஆயிரம் பேர்களுக்கு அவர்களது ஓய்வூதியப் பத்திரத்தில் 2020.01.01 முதல் உரிய ஓய்வூதியம் கிடைக்கும் என்ற வாக்குறுதி காற்றில் பறக்கவிட்டு ஐந்து வருடங்களாகியுள்ள நிலையில், இப்போது வழங்கப்படவுள்ள நிவாரணம் தொடர்பாக இந்த தரப்பினர் திருப்தி கொள்ளமாட்டார்கள்.

எதிர்பார்க்காத வகையில் 2020.01.01 இற்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களிடையே இன்னொரு முரண்பாடு தோன்றாத வகையில் அரசு தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது. இதன்படி 2017 ஆம் ஆண்டும் அதற்கு முன்னர் ஓய்வுபெற்ற சகலருக்கும் 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டுச் சம்பளத்தின்படி ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட்டு 2025 ஜுலை முதல் வழங்கப்படவுள்ளது. இதேபோல 2019 ஆம் ஆண்டு சம்பளத்தின்படி 2026 ஜுலை முதலும் 2020 ஆம் ஆண்டு சம்பளத்தின்படி 2027 ஜுலை ஓய்வூதியம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த ஜுலை என்ற காலம் பற்றி தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. 2019.07.01 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற சகல ஓய்வூதியர்களுக்கும் இந்த திகதியில் இருந்து 3/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையில் இரண்டாம் கட்டமாக இருந்த 2017 ஆம் ஆண்டு சம்பளத்திற்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு விட்டது. இதன் அடிப்படையில்தான் 2025 ஜுலை, 2026 ஜுலை, 2027 ஜுலை என்ற காலகட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர், அதிபர்கள் 1994.10.06 ஆம் திகதிய சம்பளத்தின் அடிப்படையில் இன்றுள்ள எஸ்.எல் I சம்பளத்தின் படி ஓய்வூதியம் செய்யப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தின் துணையை நாடியும், போராடி வருகின்றார்கள். இவர்கள் தொடர்ந்துள்ள வழக்கு 2025.03.03 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற, இதுபோல 2021.12.31 இற்கு முன்னர் ஆசிரியர், அதிபர்களும் 2022.01.01 முதல் செயற்படுத்தப்பட்ட சம்பளத்திற்கு ஓய்வூதியம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதைவிட பாரிய பிரச்சினையொன்று 2025.01.01 இற்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் செய்யப்பட்ட பின்னர் விஸ்வரூபம் எடுக்கவுள்ளது. அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமானது 2025.04.01 முதல் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதாயினும் 2025.01.01 முதல் ஓய்வுபெறுகின்றவர்களுக்கு 2027 ஆம் ஆண்டுக்குரிய சம்பளத்திற்கு ஓய்வூதியம் செய்யப்படும். வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளில் இணைப்பாக எழுத்து மூலஆலோசனை சொல்லப்பட்டுள்ளபடியாலும் இங்குள்ள இரண்டு அட்டவணைகளின்படி ஓய்வூதியமும் ஓய்வூதியப் பணிக்கொடையும் அதிகரிக்கப்படவுள்ளது. 30.35 வருடங்கள் சேவையாற்றிய 14 சேவைகளைச் சேர்ந்த உச்ச மட்ட சம்பளத்தில் ஓய்வுபெறும் ஊழியர்களில் 2025.04.01, 2025.07.01 முதல் பெறப்போகும் ஓய்வூதியமும் பணிக்கொடையும் இங்கு உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு சகல ஓய்வூதியர்களின் ஓய்வூதியங்களும் கணிப்பது சிரமமாகும். இது தொடர்பாக சுற்றறிக்கை சுமார் 100 பக்கங்களைக் கொண்டதாக அட்டவணைகளுடன் வெளிவந்த பின்னர்தான் சரியாக அறிந்து கொள்ளலாம். 2005 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற முதலாம் வகுப்பு அதிபர் சம்பளத்தில் 16 படிநிலையில் ஓய்வு பெற்ற என்னை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், 2025 ஜுலை மாதம் 6800 ரூபாவும் 2026 ஜுலை மாதம் 6800 ரூபாவும் 2027 ஜுலை மாதம் 6800 ரூபாவுமாக மொத்தம் 20400 ரூபாய் 27 மாதங்களில் மூன்று கட்டங்களாகக் கிடைக்கின்றமையை இங்கு தகவலாக தரலாம். இது அடிப்படை ஓய்வூதிய அதிகரிப்பாகும்.

**அட்டவணை 01**

30 வருட சேவையின் பின்னர் 01.01.2025 அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுவோர்

| சேவை வகுதிகள் | உச்ச சம்பளம் 31.12.2024 | உச்ச சம்பளம் 01.01.2025 | அதிகரிப்பு | ஓய்வூதிய வீதம் | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் 31.12.2024 | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் 01.01.2025 | ஓய்வூதிய அதிகரிப்பு | படிகள் கழிவு | தேறிய ஓய்வூதிய அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டம் | 38,990.00 | 66,540.00 | 27,550.00 | 79% | 30,802.10 | 52,566.60 | 21,764.50 | 8,000.00 | 13,764.50 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 47,990.00 | 82,800.00 | 34,810.00 | 79% | 37,912.10 | 65,412.00 | 27,499.90 | 8,000.00 | 19,499.90 |
| கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்கள் | 57,500.00 | 100,040.00 | 42,540.00 | 78% | 44,850.00 | 78,031.20 | 33,181.20 | 8,000.00 | 25,181.20 |
| இணைந்த அலுவலர்கள் | 54,250.00 | 94,100.00 | 39,850.00 | 78% | 42,315.00 | 73,398.00 | 31,083.00 | 8,000.00 | 23,083.00 |
| அதி உயர் வகுப்பு முகாமைத்துவ உதவியாளர்கள் | 68,245.00 | 119,500.00 | 51,255.00 | 76% | 51,866.20 | 90,820.00 | 38,953.80 | 8,000.00 | 30,953.80 |
| துணை மருத்துவ சேவை | 58,145.00 | 101,110.00 | 42,965.00 | 78% | 45,353.10 | 78,865.80 | 33,512.70 | 8,000.00 | 25,512.70 |
| தாதிகள் | 59,035.00 | 102,710.00 | 43,675.00 | 78% | 46,047.30 | 80,113.80 | 34,066.50 | 8,000.00 | 26,066.50 |
| நிறைவேற்றுநர்கள் | 110,895.00 | 195,970.00 | 85,075.00 | 75% | 83,171.25 | 146,977.50 | 63,806.25 | 8,000.00 | 55,806.25 |
| செயலாளர்கள் | 133,750.00 | 238,600.00 | 104,850.00 | 75% | 100,312.50 | 178,950.00 | 78,637.50 | 8,000.00 | 70,637.50 |
| மருத்துவ அலுவலர்கள் | 104,355.00 | 184,170.00 | 79,815.00 | 75% | 78,266.25 | 138,127.50 | 59,861.25 | 8,000.00 | 51,861.25 |
| இலங்கை ஆசிரிய சேவை | 89,370.00 | 157,380.00 | 68,010.00 | 75% | 67,027.50 | 118,035.00 | 51,007.50 | 8,000.00 | 43,007.50 |
| இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை | 81,520.00 | 143,080.00 | 61,560.00 | 75% | 61,140.00 | 107,310.00 | 46,170.00 | 8,000.00 | 38,170.00 |
| இலங்கை அதிபர் சேவை | 97,945.00 | 172,620.00 | 74,675.00 | 75% | 73,458.75 | 129,465.00 | 56,006.25 | 8,000.00 | 48,006.25 |
| விசேட வைத்திய நிபுணர்கள் | 82,980.00 | 145,780.00 | 62,800.00 | 75% | 62,235.00 | 109,335.00 | 47,100.00 | 8,000.00 | 39,100.00 |

**அட்டவணை 02**

01.04.2025 இற்கு பின்னர் 30 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு கிடைக்கும் ஓய்வூதியப் பணிக்கொடை

| சேவை வகுதிகள் | உச்ச சம்பளம் 31.12.2024 | உச்ச சம்பளம் 01.04.2025 | அதிகரிப்பு | ஓய்வூதிய வீதம் | ஓய்வூதியப் பணிக்கொடை 31.12.2024 | ஓய்வூதியப் பணிக்கொடை 01.04.2025 | ஓய்வூதிய அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டம் | 38,990.00 | 66,540.00 | 27,550.00 | 89% | 832,826.40 | 1,421,294.40 | 588,468.00 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 47,990.00 | 82,800.00 | 34,810.00 | 89% | 1,025,066.40 | 1,768,608.00 | 743,541.60 |
| கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்கள் | 57,500.00 | 100,040.00 | 42,540.00 | 88% | 1,214,400.00 | 2,112,844.80 | 898,444.80 |
| இணைந்த அலுவலர்கள் | 54,250.00 | 94,100.00 | 39,850.00 | 88% | 1,145,760.00 | 1,987,392.00 | 841,632.00 |
| அதி உயர் வகுப்பு முகாமைத்துவ உதவியாளர்கள் | 68,245.00 | 119,500.00 | 51,255.00 | 86% | 1,408,576.80 | 2,466,480.00 | 1,057,903.20 |
| துணை மருத்துவ சேவை | 58,145.00 | 101,110.00 | 42,965.00 | 88% | 1,228,022.40 | 2,135,443.20 | 907,420.80 |
| தாதிகள் | 59,035.00 | 102,710.00 | 43,675.00 | 88% | 1,246,819.20 | 2,169,235.20 | 922,416.00 |
| நிறைவேற்றுநர்கள் | 110,895.00 | 195,970.00 | 85,075.00 | 85% | 2,262,258.00 | 3,997,788.00 | 1,735,530.00 |
| செயலாளர்கள் | 133,750.00 | 238,600.00 | 104,850.00 | 85% | 2,728,500.00 | 4,867,440.00 | 2,138,940.00 |
| மருத்துவ அலுவலர்கள் | 104,355.00 | 184,170.00 | 79,815.00 | 85% | 2,128,842.00 | 3,757,068.00 | 1,628,226.00 |
| இலங்கை ஆசிரிய சேவை | 89,370.00 | 157,380.00 | 68,010.00 | 85% | 1,823,148.00 | 3,210,552.00 | 1,387,404.00 |
| இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை | 81,520.00 | 143,080.00 | 61,560.00 | 85% | 1,663,008.00 | 2,918,832.00 | 1,255,824.00 |
| இலங்கை அதிபர் சேவை | 97,945.00 | 172,620.00 | 74,675.00 | 85% | 1,998,078.00 | 3,521,448.00 | 1,523,370.00 |
| விசேட வைத்திய நிபுணர்கள் | 82,980.00 | 145,780.00 | 62,800.00 | 85% | 1,692,792.00 | 2,973,912.00 | 1,281,120.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# மொரீஷியஸ் நாட்டின் மிக உயரிய விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு அறிவிப்பு



(போர்ட் லூயிஸ்)

மொரீஷியஸ் நாட்டின் மிக உயரிய விருதை, பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்குவதாக அந்த நாட்டின் பிரதமர் நவின் ராமகூலம் அறிவித்துள்ளார்.

கிழக்கு ஆபிரிக்க நாடான மொரீஷியஸ் நாட்டின் தேசிய தினம் மற்றும் சுதந்திர தினத்தில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்காக, பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக அந் நாட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்தியா, மொரீஷியஸ் இடையேயான உறவை வலுப்படுத்துவதில் இந்தியா ஆற்றிய பெரும் பங்குக்காக இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் மோடி. மேலும், இந்த விருதைப் பெறும் ஐந்தாவது உலகத் தலைவராகவும் அவர் விளங்குகிறார்.

இதன் வாயிலாக, பிரதமர் மோடி, 21 ஆவது சர்வதேச கௌரவ விருதைப் பெற உள்ளார்.(நி-8)

# நாற்காலியுடன் வெளியேறிய ஜஸ்ரின் ட்ரூடோ



(ஒட்டாவா)

கனடா பாராளுமன்றத்தில் இருந்து தனது நாற்காலியுடன் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியேறினார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றது.

வட அமெரிக்க நாடான கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்ரின் ட்ரூடோ கடந்த ஜனவரி மாதம் 7 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்தார். கட்சிக்கு புதிய தலைவரை தேர்வு செய்யும் வரை பிரதமராக ட்ரூடோ தொடருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, லிபரல் கட்சியின் அடுத்த தலைவராகவும், கனடாவின் 24ஆவது பிரதமராகவும் மார்க் கார்னி தேர்வு செய்யப்பட்டுள்ளார். அடுத்த சில நாட்களில் அவர் பிரதமராக பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், புதிய பிரதமராக பதவியேற்க உள்ள மார்க் கார்னியை ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்தார். இருவரும் சில மணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

தனது பதவிக்காலம் முடிவடைவதால் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய ஜஸ்ரின் ட்ரூடோ, பாராளுமன்றத்தில் இருந்து தனது நாற்காலியுடன் வெளியேறினார்.

இதுதொடர்பான புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதுகுறித்து நெட்டிசன்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.

கனடாவில் எம்.பியாக இருந்தவர் பதவி விலகியதும் தான் அமர்ந்திருந்த நாற்காலியை கொண்டு செல்லலாம் என்பது நடைமுறை ஆகும். (நி-8)

# போர் ...
# பச்சைக்...

(கீவ்)


**சவுதி அரேபிய... இடையே நடந்த ... பின்னர், அமெர... வுடன் உடனடியா... ஏற்கத் தயா... தெரிவித்துள்ளது...**

அமெரிக்க வெளிவிகாரச் செயலாளர் மார்கோ ரூபியோ, இந்த வாய்ப்பை ரஷ்யாவிடம் முன்வைக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், "நேர் மறையான" திட்டத்திற்கு ரஷ்யாவை ஒப்புக்கொள்ள வைப்பது இப்போது அமெ ரிக்காவி... என்று உ... வொலெ... தெரிவித்...

ஜெத்... முன்தின... நடந்த ... ஒவல் அ... ரைன் ஜ... ஸ்கிக்கு...

# கிரீன்லாந்தில் கண் வைக்கும் அமெரிக்கா ட்ரம்பிற்கு எதிராக திரும்பும் ஐரோப்பா?



கிரீன்லாந்து மீது அமெரிக்கா நேரடி போருக்குத் தயாராகி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் அண்டை நாடாக டென்மார்க் உள்ளது. டென்மார்க்கின் ஒரு பகுதியாக கிரீன்லாந்து உள்ளது. இது டென்மார்க்கின் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பிரதேசமாகும்.

இந்நிலை யில் கிரீன்லாந்தை கைப்பற்றப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து கூறிவருவதால் அங்கு போர் நடத்த வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் கிரீன்லாந்தை கைப்பற்ற அமெரிக்கா போர் தொடுத்தால் அது மாபெரும் போராக மாறலாம். ஏனெனில் கிரீன்லாந்தை உள்ளடக்கிய டென்மார்க் நாடு என்பது நேட்டோவில் உறுப்பினராக உள்ளது. நேட்டோவில் மொத்தம் 29 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இதில் அமெரிக்காவும் ஒன்று. ஆனால் நேட்டோவில் இருந்து அமெரிக்கா வெளியேற உள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் கூறிவருகிறார். இவ்வாறான சூழலில் அமெரிக்கா, கிரீன்லாந்தில் போர் தொடுத்தால் நிச்சயம் நேட்டோ உறுப்பு நாடுகள் அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும். ஏனெனில் நேட்டோவின் விதியின்படி அதில் உறுப்பினராக உள்ள நாட்டின் மீது யாராவது போர் தொடுத்தால் நேட்டோ நாடுகள் ஒன்றிணைந்து பதிலடி கொடுக்க வேண்டும்.

இதனால் அமெரிக்கா கிரீன்லாந்து மீது போரை தொடங்கும் பட்சத்தில் அது ஐரோப்பா - அமெரிக்கா இடையேயான போராக மாறலாம்.

நேட்டோவில் ஐரோப்பிய நாடுகள் தான் அதிகம் உள்ளன. ஏற்கனவே உக்ரைன் மீதான ரஷ்யா போர் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் காணப்படுகின்றது.

இந்நிலையில் டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்கா, கிரீன்லாந்தில் போரை தொடங்கினால், நிச்சயம் அமெரிக்கா - ஐரோப்பிய நாடுகள் இடையே போர் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

# பாகிஸ்தா... பயங்கரவா...

**104 பணயக் ...**

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் ஆயுத மேந்திய தீவிரவாதிகள் 400 இற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் சென்ற ரயிலைத் தாக்கி, அவர்களில் பலரை பணயக் கைதிகளாக சிறைப்பிடித்து வைத்திருந்ததாக அந்நாட்டு பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

குவெட்டாவிலிருந்து பெஷாவர் நோக்கிச் சென்ற ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயில் மீது பலூச் விடுதலைப் படை துப்பாக்கிச் சூடு நடத்தியது.

சிபி மாவட்டத்தில் ரயிலைத் தாக்குவதற்கு முன்பு தண்டவாளத்தில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ர் நிறுத்தத்திற்கு தயார்!
# சக்கொடி காட்டியது உக்ரைன்!

**ரேபியாவில் அமெரிக்கா-உக்ரைன் நடந்த ஒரு நாள் பேச்சுவார்த்தைக்குப் அமெரிக்கா முன்மொழிந்த ரஷ்யா னடியான 30 நாள் போர் நிறுத்தத்தை தயாராக இருப்பதாக கீவ் துள்ளது.**



ரிக்காவின் பொறுப்பாகும் என்று உக்ரைன் ஜனா திபதி வொலொடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ஜெத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாயன்று நடந்த பேச்சுவார்த்தை, ஓவல் அலுவலகத்தில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையில், முன்னதாக நடந்த சந்திப்பின் அசாதாரண மோதலுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் அதிகாரபூர்வ சந்திப்பு இதுவாகும்.

ஜெத்தாவில் நடந்த பேச்சுவார்த்தையின் ஆக்கப்பூர்வமான தன்மைக்கு உக்ரைன் ஜனாதிபதி ட்ரம்பிற்கு நன்றி தெரிவித்தார்.

எனினும், பேச்சுவார்த்தை தொடர்பில் மொஸ்கோ இன்னும் பதிலளிக்கவில்லை. பேச்சுவார்த்தையின் முடிவுகள் குறித்து வோஷிங்டனால் விளக்கமளிக்கப்பட்ட பின்னர் ரஷ்யா ஒரு அறிக்கையை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ரஷ்யா 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியது. தற்போது அது உக்ரைன் பிரதேசத்தில் சுமார் 20% கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

இதேவேளை, போர் நிறுத்தத்திற்கான இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், உக்ரைனின் போர்க்கள நிலைகள், குறிப்பாக ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஸ்தான் ரயிலில் கரவாத தாக்குதல்
### ணயக் கைதிகள் மீட்பு

ாத்)
ன் பலுசிஸ்
ில் ஆயுத
ரவாதிகள்
மற்பட்ட பய
றிச் சென்ற
கி, அவர்
பணயக்
றைப்பிடித்து
அந்நாட்டு
டாரங்கள்
னம் செவ்
தெரிவித்தன.
விலிருந்து
கிச் சென்ற
ிரஸ் ரயில்
விடுதலைப்
ச் சூடு நடத்

த்தில் ரயி
ற்கு முன்பு
ில் குண்டு
தாக்குதல்
் தெரிவிக்

எவ்வாறெனினும், 58 ஆண்கள், 31 பெண்கள் மற்றும் 15 குழந்தைகள் உட்பட 104 பயணிகளை பயங்கரவாதிகளிடமிருந்து வெற்றிகரமாக மீட்டுள்ளதாக பாகிஸ்தானிய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி, 16 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் காயமடைந்த 17 பேர் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் அறிக்கைகளின்படி, பலூச் அரசியல் கைதிகளை அதிகாரிகள் 48 மணி நேரத்திற்குள் விடுவிக்காவிட்டால், பணயக் கைதிகளைக் கொன்று விடுவதாக போராளிகள் அச்சுறுத்தல் விடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## அமெரிக்கா- தென்கொரியா போர்பயிற்சி
# ஏவுகணை ஏவி அச்சுறுத்தும் வடகொரியா!



(பியாங்யாங்)

அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரிய இராணுவம் ஆரம்பித்த போர் பயிற்சியை குழப்பும் நோக்கில் வடகொரியா கடலுக்கு அடியில் பல பெலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியுள்ளதாக தென் கொரிய இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

தென்கொரிய அரசாங்கம் நேற்று முன்தினம் பயிற்சியை ஆரம்பித்த சில மணி நேரங்களின் பின்னர் வட கொரியா இவ்வாறு ஏவுகணைகளை ஏவி தனது கோபத்தை வெளிப்படுத்தியிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் கொரியா மற்றும் அமெரிக்க வீரர்கள் வருடாந்தக் கூட்டு இராணுவ பயிற்சியை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

11 நாட்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியின்போது, இரு நாடுகளின் படைகளும் தங்கள் அதிநவீன ஆயுதங்கள் மற்றும் போர் திறன்களை வெளிப்படுத்தவுள்ளனர். எனினும் இந்த ஏவுகணைத் தாக்குதலும் தமது இராணுவப்பயிற்சி என வடகொரியா அறிவித்துள்ளதுடன் தென்கொரியாவின் குற்றச்சாட்டினை மறுத்துள்ளது.

வடகொரியாவின் ஏவுகணைகள் ஹ்வாகி மாகாணத்திலிருந்து ஏவப்பட்டன. வருடத்தில் ஐந்தாவது முறையாக வடகொரியா இதுபோன்ற ஏவுகணைகளை கடற்பகுதிக்குள் ஏவியுள்ளதாக தென் கொரியாவின் கூட்டு இராணுவத் தலைவர் தெரிவித்தார்.


தென் கொரியா - அமெரிக்கா இராணுவக் கூட்டுப் பயிற்சியை எதிர்த்து தென் கொரியப் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு வெளியே போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பயிற்சி தென் கொரியாவில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என்பதால் அதை நிறுத்துமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்துகின்றனர். கடந்த வாரம் இடம்பெற்ற பயிற்சியின் போது, வட கொரிய எல்லையில் உள்ள போச்சான் பகுதியில் இரண்டு தென்கொரிய போர் விமானங்கள் தவறுதலாக மக்கள் வசிக்கும் பகுதியில் குண்டுகளை வீசியுள்ளதாகவும் இதில் 30 பேர் காயமடைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கூட்டு இராணுவப் பயிற்சியும், கடலில் வடகொரியாவின் ஏவுகணை வீச்சும் குறித்த பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனமழையால் நிரம்பி வழியும் 42 நீர்த்தேக்கங்கள்



(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள நீர்ப்பாசனத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 73 முக்கிய நீர்த்தேக்கங்களில் 42 நீர்த்தேக்கங்கள் நேற்றுக் காலை 7 மணி நிலவரப்படி, கன மழை காரணமாக தற்போது நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர்ப்பாசனத் திணைக்களத் துறையின் கூற்றுப்படி, அவற்றில் அம்பாறை மாவட்டத்தில் ஏழு நீர்த்தேக்கங்களும், அநுராதபுரத்தில் ஆறும், பதுளையில் ஐந்தும், பொலநறுவையில் மூன்றும், திருகோணமலையில் மூன்றும் உள்ளன.

மின்னேரிய, கடுவலை, கந்தளாய், ராஜாங்கனை, லுணுகம் வெஹெர, சேனநாயக்க சமுத்திர, பராக்கிரம சமுத்திர ஆகிய முக்கிய நீர்த்தேக்கங்கள் நீர் கசிந்து வருவதாக திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

தொடர்ந்து நீர் கசிவு ஏற்பட்ட போதிலும், நீர்த்தேக்கங்களில் மொத்த நீர் சேமிப்பு திறனில் தோராயமாக 93% ஐ வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 100-150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 700 | 500 | 700 | 600-650 |
| தக்காளி | 160 | 100 | 180 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 250-300 |
| கோவா | 300 | 400 | 300 | 180 |
| கரட் | 800 | 1000 | 700-850 | 780 |
| பூசணி | 160 | 150 | 120 | 80-100 |
| புடோல் | 180 | 150 | 150 | 120 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 150 | 150-250 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 150 |
| பாகற்காய் | 300 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300 | 250-300 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 250 | 150 |
| பயற்றங்காய் | 450 | 300 | 450 | 350-400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 200 | 150 | 200 | 120-150 |
| கறிமிளகாய் | 600 | 400 | 450 | 400-600 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 3000 | 2500 |
| போஞ்சி | 400 | 300 | 400 | 300-350 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 70 | 100 |
| கீரை – 1 பிடி | 120 | 150 | 100 | 60-70 |
| தேசிக்காய் | 250 | 100 | 250 | 200-250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 240 | 150-250 |
| இராசவள்ளி | 500 | 500 | 450 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 250 | 40-80 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 70 | 100 |
| வல்லாரை | 60 | 80 | 60 | 50 |
| ஈரப்பலா | 150 | 50 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 338



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அதுமட்டும் போதுமா?

எனக்கு இதுமட்டும் தான் சேர் தெரியும் இதைத்தவிர வேறு எதுவும் தெரியாது! என்று சொல்லிக் கொண்டே காலம் தள்ளுறவர்கள் பல பேர். அவர்கள் எல்லாம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். உலகியல் அறிவு இல்லாமல் இருந்துவிடக்கூடாது. அது ஆபத்து.

இதற்காக நம்ம தாத்தா, பாட்டியெல்லாம் ஒரு கதை சொல்லுவார்களே. கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஒரு சமயம் ஒரு நாலுபேர் சேர்ந்து வெளியூருக்கு பிரயாணம் போனார்களாம். அந்த நாலுபேரும் எப்படித் தெரியுமா?

ஒருத்தர் வேதாந்தி. இன்னொருத்தர் சங்கீத வித்துவான். மூன்றாவது ஆள் வைத்தியர். நாலாவது ஆள் ஜோசியர். இவர்கள் நாலுபேரும் நண்பர்கள். அதனாலே சேர்ந்து புறப்பட்டார்கள்.

வழியிலே ஒரு ஊரிலே தங்கினார்கள். இருட்டிப் போச்சு அதனால் இன்றைக்கு இரவு இங்கேயே தங்கியிருந்து கொண்டு நாளைக்குப் புறப்படலாம் என்று தீர்மானம் செய்தார்கள். சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அங்கேயே கடைத்தெருவுக்குப் போய் பொருட்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து சமைத்து சாப்பிடலாம் என்று முடிவு செய்தார்கள்.நாலுபேர் இருக்கிறதினால் ஆளுக்கு ஒரு காரியமாகச் செய்யலாம் என்று வேலையை பிரித்துக் கொண்டார்கள். வைத்தியர் காய்கறி வாங்கப் போனார். வேதாந்தி எண்ணெய் வாங்கப் போனார். ஜோசியர் பலசரக்கு வாங்கப் போனார். சங்கீத வித்துவானுக்கு சமைக்கிற வேலை.

எல்லாம் சரி ஆனால் நடந்தது என்ன தெரியுமா? கடைத் தெருவுக்கு காய்கறி வாங்கப் போனார் அல்லவா வைத்தியர். அங்கே போய் சந்தையில் பார்த்தார். ஒவ்வொரு காய்கறியாக எடுத்துப் பார்த்தார்.

இது பித்தம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. இது வாயு உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது என்று ஒவ்வொன்றாக தள்ளினார்.கடைசியிலே ஒன்றுமே தேறவில்லை. வெறுங்கையோடு திரும்பி வந்தார்

எண்ணெய் வாங்கப் போனாரே வேதாந்தி. ஒரு தொன்னையில் எண்ணை வாங்கினார். பேசாமல் அதை எடுத்துக் கொண்டு வரவேண்டியது தானே. முடியவில்லை. அவர் வேதாந்த மூளை சிந்திக்க ஆரம்பித்துவிட்டது.

தொன்னைக்கு எண்ணெய் ஆதாரமா? அல்லது எண்ணெய்க்குத் தொன்னை ஆதாரமா? என்னும் ஆராய்ச்சியிலே இறங்கினார். என்ன ஆச்சு தெரியுமா? வாங்கிய எண்ணெய் முழுவதையும் வழியிலே கொட்டி விட்டு வெறும் தொன்னையோடு வந்து சேர்ந்தார்.

பலசரக்கு வாங்கப் போனாரே ஜோசியர் அவர் வழியிலே வந்தவர்களையெல்லாம் அங்கங்கே ஒரு மரத்தடியிலே உட்கார வைத்து அவர்களுக்கெல்லாம் ஆரூடம் சொல்ல ஆரம்பித்துவிட்டார். அப்படி ஒவ்வொருத்தராகச் சொல்லி முடித்துவிட்டு கடைத்தெருவுக்குப் போய் சேர்ந்தார்.

இவர் அங்கே போய் சேர்வதற்குள் நிறைய நேரம் ஆகிவிட்டது.கடையை பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். என்ன செய்வது? இவரும் வெறுங்கையோடு திரும்பி வந்து சேர்ந்தார். சரி இவர்கள் கதை தான் இப்படி ஆகிவிட்டது. அங்கே சமைப்பதற்காக உட்கார்ந்திருந்தாரே சங்கீத வித்துவான் அவர் கதை என்ன ஆச்சு தெரியுமா?

அங்கே அவர் அடுப்பைப் பத்த வைத்து உலையை கொதிக்க வைத்தார். அதாவது ஒரு பானையில் தண்ணீரை ஊற்றி அடுப்பிலே வைத்தார். அது கொதிக்க ஆரம்பித்தது. தண்ணீர் கொதிக்கிற சத்தம் இருக்கல்லவா? அது இவருக்கு தாளம் போடுறது மாதிரி இருந்தது. ஒரே குஷி. பாட ஆரம்பித்தார். பாடிக் கொண்டே உற்சாகமாக கையிலே இருந்த கரண்டியாலே அந்தப் பானையிலே தட்டினார். அவ்வளவு தான். பானை பட்டென்று உடைந்து போய்விட்டது.

தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

எந்தத் தொழில் தெரிஞ்சாலும் சரி. அதைப் புத்திசாலித்தனமாக பயன்படுத்தத் தெரியவில்லை என்றால் ஆபத்துத் தான். அதற்காகத் தான் இந்தக் கதை.

ஒரு பஸ் டிரைவர் சேர். மிகவும் கெட்டிக்காரர். பஸ்ஸை மிகவும் திறமையாகத்தான் ஓட்டிக் கொண்டு போகின்றவர். ஒரு நாள் படகிலே போகும் போது நடுக்கடலுக்கு போனதும் படகு நின்று விட்டது. மோட்டரிலே ஏதோ கோளாறு.

என்ன செய்யலாம் என்று அந்த டிரைவரைக் கேட்டிருக்கின்றார்கள். படகிலே இருந்தவர்கள் எல்லாம்.

கவலைப்படாதீர்கள் ஒன்றும் பிரச்சினை இல்லை. எல்லோரும் கொஞ்சம் கீழே இறங்கி தள்ளுங்கள் மோட்டர் ஸ்டார்ட் ஆயிடும் என்றாராம் அந்த ஆள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய தீர்வு கிடைக்க வேண்டும் கிளிநொச்சி சேவைச் சந்தையினர்

## தொடர் போராட்டம்



(கிளிநொச்சி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சி சேவைச் சந்தையினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உரிய தீர்வு கிடைக்காமையினால் தொடர் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இதன்போது குறித்த இடத்திற்கு கரைச்சி பிரதேச செயலர், உள்ளூராட்சி ஆணையாளர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

எனினும் குறித்த கலந்துரையாடலின் போது சுமூகமான முடிவுக்கு வராத காரணத்தினால் உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (6-8-271-316)

# மகேந்திரா-மோட்டார் சைக்கிள் மோதிவிபத்து; இருவர் காயம்


(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தினை முந்தி செல்ல முற்பட்ட போது எதிரே வந்த மகேந்திரா கப்ரக வாகனத்துடன் மோதி விபத்து சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் மோட்டார் ஸ்சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயங்களுக்குள்ளாகிய நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-299)



கிளிநொச்சி மாவட்டத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது மற்றும் அதிலிருந்து மீண்டெழும் தன்மையினைக் கட்டியெழுப்பும் திட்டக் கலந்துரையாடல் நேற்றுக் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விடுதில் இடம்பெற்றது. (படம்-தேவானந்தன்)

# சுற்றுலா பயணிகள் மையம் திறந்து வைப்பு




(கருமபுரம்)

கிளிநொச்சி குளத்தின் கீழ் சுற்றுலா பயணிகள் மையம் வடக்கு ஆளுநரினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி குளத்தின் கீழ்ப்புறமாக உள்ள கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் உருவாக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் மையத்தில் விசைப் படகு, துடுப்பு படகு ஆகிய பொழுதுபோக்கு சேவைகள் மற்றும் பாரம்பரிய உணவுகள் இயற்கை குளிர்பானங்கள் என்பனவும் சிறுவர்களுக்கு எற்ற விளையாட்டு கள் என இவ் சுற்றுலா மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் ராஜகோபால், கரைச்சி பிரதேச செயலாளர், வைத்தியர்கள், அரச அதிகாரிகள், தொழிலதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர். (6-8-316)

# மாணவர் பாராளுமன்றில் இலத்திரனியல் வாக்களிப்பு



(குருமன்காடு)

இலங்கையில் முதல் தடவையாக இலத்திரனியல் வாக்களிப்பு முறையிலான வாக்களிப்பு நேற்று வவுனியா விபுலானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

குறித்த கல்லூரி மாணவன் கபிலாசால் அண்மையில் புத்தாக்க போட்டிக்காக கண்டுபிடிக்கப்பட்டு தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரத்தை பயன்படுத்தி இவ் வாக்களிப்பு செயற்பாடு இடம் பெற்றது.

இலங்கை தேர்தல் முறையில் கடதாசி பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கோடு குறித்த மாணவரினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொறிமுறை முதன் முறையாக மாணவர் பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை அதிபர், அயல் பாடசாலை அதிபர்கள், கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் முன்னிலையில் வாக்களிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டதோடு வாக்களிப்பும் இடம் பெற்றிருந்தது.

இதன் பின்னர் குறுகிய நேரத்தில் முடிவுகள் வெளியிடப்பட்டிருந்தமையும் விசேட அம்சமாகும். (6-8-250)

# பெண் நிலைச் சந்திப்பும் உரையாடலும்

(யாழ்ப்பாணம்)

ஊடறு நிறுவனத்தின் 20 ஆவது வருடத்தை முன்னிட்டு பெண்நிலைச் சந்திப்பும் பெண்ணிய உரையாடலும் நாளை மறுதினம் 15 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் பெண்களும் திருநங்கைகளும் மற்றும் 2 ஆம் நாள் நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்திய புளொட்

(குருமன்காடு)

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில்கட்டுப் பணம் செலுத்தியது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணத்தை கட்சியின் மாவட்ட இணைப்பாளர் செ.மயூரன், புளொட் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திரகுலசிங்கம், ஈபி ஆர் எல் கட்சியின் முக்கியஸ்தர் மோசஸ், ரெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் சந்திரபத்மன் உள்ளடங்கிய கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர். (6-8-250)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வலயகல்வி பணிமனைக்குட்பட்ட விஸ்வமடு பாரதி வித்தியாலயத்தில் இடை நிலை தொழில்நுட்ப ஆய்வு கூடம் வடமாகாண ஆளுநரினால் நேற்று திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டது.(படம்- தேவானந்தன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 723





"தந்தை சொன்னதிலிருந்தும், வந்தியத்தேவர் சொன்னதிலிருந்து ஊகித்துக் கொண்டேன், தம்பி! அவள் உன்னைத் தன் சொந்த மகன் என்று எண்ணியிருக்கிறாளா? அல்லது சக்களத்தியின் மகன் என்று எண்ணியிருக்கிறாளா?"

"அந்த மாதிரி வேற்றுமையான எண்ணம் என் மனத்திலும் உதிக்கவில்லை. அவள் மனதில் எள்ளளவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏன் அம்மாதிரி வேற்றுமைப் படுத்திப் பேசுகிறாய்?"

"தம்பி, அந்த ஊமை ஸ்திரீ வீற்றிருக்க வேண்டிய சிங்காசனத்தில் நம் தாயார் வீற்றிருக்கிறாள். அது தெரிந்திருந்தும் அவள் உன்னிடம் அத்தனை அன்பு வைத்திருந்தால், அது மிக்க விஷேடமல்லவா?"

"நான் அவள் வயிற்றில் பிறந்த மகனல்ல என்பது அவளுக்குத் தெரிந்து தானிருக்க வேண்டும். வயது வித்தியாசம் தெரியாமலா போகும்? அவளால் பேச முடியாது. மனதில் உள்ளதைச் சொல்ல முடியாது. ஏதோ சித்திரங்கள் எழுதிக் காட்டியதைக் கொண்டு எவ்வளவு தெரிந்து கொள்ளலாமோ, அவ்வளவு தெரிந்து கொண்டேன். என்னிடம் அவளுடைய அன்பு இருக்கட்டும் நம் தந்தையிடம் அவள் எத்தகைய அன்பு வைத்திருக்க வேண்டும் என்பதை நினைத்தால் என் நெஞ்சு உடனே உருகி விடுகிறது. அக்கா! என்னுடைய பிராயத்தில் அப்பா என்னைப் போல இருப்பாரா?"

"இல்லை, தம்பி, இல்லை! உன்னுடைய பிராயத்தில் நம் தந்தை மன்மதனைத் தோற்கடிக்கும் அழகுடன் விளங்கினார். நம்முடைய சோழகுலம் வீரத்துக்குப் பெயர் போனதே தவிர அழகுக்குப் பெயர் போனதல்ல. நம் பாட்டனார் அரிஞ்சய தேவர் அழகில் நிகரற்ற வைதும்பராயன் குலத்தில் பிறந்த கல்யாணியை மணந்தார். கல்யாணியை அரிஞ்சயர் மணந்த போது அவள் பத்தரை மாற்றுப் பசும் பொன்னொத்த மேனியும், பூரண சந்திரனையொத்த முகமும் கொண்ட புவன மோஹினியாக விளங்கினாள்.

தற்சமயம் இத்தனை வயதான பிறகும் கல்யாணிப்பாட்டி எவ்வளவு அழகாயிருக்கிறாள் என்பதை நீயே பார்த்திருக்கிறாய். அதனால் நமது தந்தையும் அவ்வளவு அழகுடன் இருந்தார். 'சுந்தரசோழர்' என்ற பட்டப் பெயரும் பெற்றார். நாம் நம்முடைய தாயாரைக் கொண்டு பிறந்திருக்கிறோம். திருக்கோவலூர் மலையமான் வம்சத்தில் பிறந்தவர்கள் அழகை வெறுப்பவர்கள். அழகு வீரத்துக்குச் சத்துரு என்று நினைப்பவர்கள்"

"அழகுக்கும், வீரத்துக்கும் என்ன சம்பந்தம் உண்டோ என்னமோ, எனக்குத் தெரியாது. ஆனால் அழகுக்கும், அன்புக்கும் சம்பந்தமில்லை என்பதை அறிவேன்.

நம்முடைய தந்தையிடம் இருபது வருடங்களுக்கு மேலாக அவள் உள்ளத்தில் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த அத்தனை அன்பையும் உன் பேரிலே சொரிந்திருக்கிறாள். அதற்குப் பதினாலு உலகமும் இணையில்லைத் தான்!"

"உனக்கு அது எப்படி தெரிந்தது, அக்கா?" "எதைச் சொல்கிறாய், தம்பி!"

"அவள் நம்முடைய பெரிய தாயார் என்பது?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இயல்வது கரவேல்



மயிலாடி என்ற ஊரில் தினசரி சந்தை ஒன்றிருந்தது. சந்தையில் எல்லாப் பொருட்களுமே மக்களுக்கு தரமான விலையில் கிடைத்ததால், மக்கள் கூட்டம் தினமும் சந்தையில் அலை மோதியது.

அந்தச் சந்தையில் சோலையப்பன் என்பவன் காய்கறிக் கடை வைத்திருந்தான். சோலையப்பன் கடையில் தினமும் நல்ல விதமாக வியாபாரம் நடைபெறத் தொடங்கியது.

ஒருசில நாட்களில் மயிலாடி ஊரைச் சுற்றிலும் கடும் மழை பெய்யத் தொடங்கியது. கடும் மழை தொடர் மழையானது. ஒருவாரம் தொடர்ந்து மழை பெய்யத் தொடங்கியது.

இந்தத் தொடர் மழையால் சந்தையில் நடத்தி வந்த சோலையப்பனின் காய்கறி வியாபாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. சோலையப்பன் மிகவும் கஷ்டப்படலானான்.

அவனுக்கு தின[illegible] காய்கறி கொடு[illegible] வந்தவர்கள் சோலையப்பன் ஒரு வாரமாக பணம் கொடுக்காத காரணத்தால் காய்கறி கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள்.

சோலையப்பன் "மழையினால்தானே தொழில் பாதிப்படைந்தது. மறுபடி நான் உங்களுக்கு பணம் தவறாமல் கட்டி வந்திருக்கின்[illegible] வழக்கம் போல் எனக்கு காய்கறிகள் கடனாக கொடுங்கள்" என்று எவ்வளவோ கெஞ்சிக் கேட்டான்.

சோலையப்பனின் அழுகுரலை மொத்த காய்கறி வியாபாரிகளும் நிராகரித்து விட்டனர். சோலையப்பன் கவலையில் ஆழ்ந்தான். இனிமேல் இவர்களை நம்பி எந்த பிரயோஜனமும் இல்லை.

நாம் யாரிடமாவது பணம் கடனாக வாங்கித்தான் வியாபாரம் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். உடனே தன் நண்பன் ஆறுமுகத்தின் உதவியை நாடி, அவனிடம் சிறிது பணம் கடனாகக் கேட்டான்.

ஆறுமுகம் சோலையப்பனை நன்கு உபசரித்து அனுப்பினான். பணம் மட்டும் கொடுக்காமல் கையை விரித்துவிட்டான். ஆறுமுகத்திற்கு சோலையப்பன் ஒரு காலத்தில் எவ்வளவோ உதவிகள் செய்திருக்கின்றான்.

ஆனால் இப்போது தனக்கு உதவி செய்யாத ஆறுமுகத்தை நினைத்து மனம் வெம்பினான் சோலையப்பன். இரவு நேரம் ஆறுமுகம் தன் வீட்டில் குறட்டை விட்டபடி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

அப்போது நான் கைந்து திருடர்கள் ஆறுமுகத்தின் வீட்டின் உள்ளே நுழைந்தார்கள். ஆறுமுகத்தை அடித்து உதைத்து அவன் வீட்டில் இருந்த பணத்தை எல்லாம் திருடிச் சென்று விட்டார்கள்.

சோலையப்பனுக்கு உதவி செய்யாத ஆறுமுகத்தின் பணம் அநியாயமாக திருடர்களின், வசம் சென்று விட்டது. இயன்றவரையிலும் பிறருக்கு, மறைக்காமல் பொருள் உதவி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும் பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு பெண் மருத்துவருக்கு ஏற்பட்ட அவலம் காணீர்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்ட சம்பவம் நாடு முழுமையிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரஸ்தாப மருத்துவர் தங்குகின்ற விடுதியில் நடந்த இச்சம்பவம் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பில் இன்னமும் நாம் பின்தங்கிய நிலையில் உள்ளோம் என்பதை உறுதி செய்கிறது.

உண்மை. மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம்.

சர்வதேச மகளிர் தினத்தை மகளிர் அமைப்புகள் கொண்டாடி இருக்கக்கூடிய நேரத்தில், வெறும் இரண்டு நாட்களின் பின் கடந்த 10 ஆம் திகதி இரவுப் பொழுதில் இளம் பெண் மருத்துவர் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி ஒட்டுமொத்த மக்களையும் கதிகலங்கச் செய்வதாகும்.

அதேநேரம் ஒரு பெண் மருத்துவருக்கே இக்கதி எனும்போது சாதாரண பெண்களின் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே மனம் பதறுகிறது.

உண்மை. பிரஸ்தாபப் பெண் மருத்துவர் தனக்கு ஏற்பட்ட அவலத்தைத் துணிந்து வெளிப்படுத்தியதன் காரணமாக மேற்படி சம்பவம் அரங்கிற்கு வந்துள்ளது.

கற்றறிந்த மருத்துவர் என்பதால், அவர் தனக்கு ஏற்பட்ட அவலத்தை வெளிப்படுத்தி பெண்களின் பாதுகாப்பு எவ்வாறாக உள்ளதென்பதைப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

ஆனால், இதே அவலங்கள் நாட்டில் நடந்து கொள்கிறதாயினும் அதனை வெளிப்படுத்த முடியாமல், அப்பாவிப் பெண்கள் வாழ்நாள் முழுவதும் தங்களுக்கு ஏற்பட்ட அவலத்தை – அவமானத்தை நினைந்து நினைந்து மனம் வெதும்புகின்றனர்.

இங்குதான் பெண்களின் பாதுகாப்பு எத்துணை முக்கியமானதென்ற விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அதேநேரம் பிரஸ்தாபப் பெண் மருத்துவரை பலாத்காரம் செய்த நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதுமான தகவல்கள் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தற்போது தெரியவந்துள்ளது.

நிற்க, பாலியல் பலாத்காரத்திற்குட்பட்ட பெண் மருத்துவர் ஒரு தமிழர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவர் தமிழா? சிங்களமா? என்ற இனப் பிரிப்பு தேவையற்றதாயினும் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் எனும் போது, தமிழ்ப் பெண்களைப் பலாத்காரம் செய்தால், அதற்கு எதிராக விசாரணையும் இல்லை. தண்டனையும் இல்லை என்ற சிந்தனை அந்த நபரிடம் இருந்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆம், யுத்த காலங்களில் இராணுவம் தமிழ் மக்களுக்குச் செய்த அநீதிகளுக்கு, அக்கிரமங்களுக்குத் தண்டனைகள் வழங்கப்படாத நிலையில், தமிழ்ப் பெண்ணை பலாத்காரம் செய்தால் அதனைச் சிங்களப் பேரினவாதம் ஏற்றுக் கொள்ளும் என்ற மனநிலை பிரஸ்தாப நபரிடம் இருந்திருக்கலாம்.

ஆகவே குறித்த பாலியல் பலாத்கார விவகாரத்தின் மீதான விசாரணையானது தமிழர்கள் தொடர்பில் இராணுவத்தின் மனநிலை எப்படியாக உள்ளதென்ற மெய்மையையும் வெளிப்படுத்தும் என்பதால், இது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் தீவிர கரிசனை காட்டி; நீதியை நிலைநாட்டி, அதிலிருந்து படையினரின் மனநிலையைச் செம்மைப்படுத்த வேண்டும்.

## உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனு தாக்கலின்போது தேர்தல் சட்டம் குறித்து அவதானத்துடன் செயற்படுக

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்துக்கமைய தாக்கல் செய்யப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதால், அது தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சித் தேர்தலுக்கான 19ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் கட்டுப்பணம் செலுத்தும் காலம் நிறைவடையவுள்ளது.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேட்புமனு தாக்கல் செய்யவுள்ள சகல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடம் சட்டத்தின் 28ஆவது உறுப்புரைக்கமைய அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வது எமது நோக்கமல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனில் வேட்புமனுக்கள் அதற்கேற்றவாறு தவறுகள் இன்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதேபோன்று 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம், 25 சத வீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று வேட்பாளர்களின் சொத்து மதிப்பு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். தேர்தலின் போது வாக்காளர்களைப் போன்று வேட்பாளர்களுக்கும் ஜனநாயகப் பொறுப்புக் காணப்படுகின்றது என்பதால் அதற்கேற்ப செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என்றார். (ம-7)

## தமிழ்ச்சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா இன்று வியாழக்கிழமை (13) மாலை 4.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ் சிறப்புக்கலை மாணவன் யோ. நிவேதன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நடனத் துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் கி.அருட்செல்வியின் நெறியாள்கையில் திருக்குறள் நடனம் இடம் பெறும்.

திருக்குறளில் பண்புற மொழிதல் என்ற தலைப்பில் ஆசிரியர் ந.குகபரன் சிறப்புரை ஆற்றுவார்.

தொடர்ந்து செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனின் நெறியாள்கையின் கீழ் பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ்ப்பாடத்தைக் கற்கும் மாணவரிடையேயான திருக்குறள் வினாடிவினா இறுதிப்போட்டி இடம்பெறும்.

மாணவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கி வைப்பார். தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு திருக்குறள் உரை நூல்களை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் வழங்கி வைப்பார்.

இந் நிகழ் வினை தொடர்ந்து இன்றைய தமிழர் செல்நெறி வள்ளுவர் வகுத்த பாதையில் பயணிக்கின்றதா எனும் தலைப்பில் வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.

இதில் திருமதி ர.தர்மினி, செல்வி இ.கார்த்தியாயினி, திருமதி செல்வதிஅம்மா, தெ.ஹர்ஷன், ஜீவா சஜீவன், த.கருணாகரன் ஆகியோர் வாதிடவுள்ளனர்.

இந்நிகழ்வில் நன்றியுரையை தமிழ்ச்சங்கப் பொருளாளர் லோ.துஷிகரன் ஆற்றுவார். (ம-7)

### மன்னாரில் 5 சபைகளுக்கு

## கட்டுப்பணம் செலுத்திய இலங்கைத் தமிழரசுக்கட்சி

(மன்னார்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட 5 சபைகளுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி நேற்றுப் புதன்கிழமை (12) மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான குழுவினர் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை,மன்னார் பிரதேச சபை ,நானாட்டான் பிரதேச சபை,முசலி பிரதேச சபை ,மாந்தை மேற்குப் பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். (ம-7,285)

## சாகல ரத்நாயக்கவின் அலுவலகத்தில் சோதனை

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை கண்டுபிடிக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள், மாத்தறை மொரவக்கவில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்கவின் அலுவலக வளாகத்தில் சோதனை நடத்தினர்.

மாத்தறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (11) பிறப்பித்த திறந்த பிடியாணை உத்தரவினைத் தொடர்ந்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

அந்த உத்தரவுக்கு அமைய முன்னாள் பொலிஸ்மா அதிபர் எங்கு காணப்பட்டாலும் உடனடியாக அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

## ஹட்டனில் கையூட்டல் பெற்ற சார்ஜன்ட் கைது

ஹட்டனில் கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கொடைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றிலிருந்து முறைப்பாட்டாளரையும் அவரது மனைவியையும் விடுவிப்பதற்கும் வழக்கை முடிவுக்குக்கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட சார்ஜன்ட் ஒரு தொகைப் பணத்தைக் கையூட்டலாகக் கோரியுள்ளார்.

குறித்த சார்ஜன்ட் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் வைத்து, கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:38 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L,Driver(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15207 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>1 இல் செவ்<br>கி.பா:58<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: Bsc, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15210 |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, Structural Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/15208 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 32 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15214 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>12 இல் சூரி செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: PHD,Software Engineer(German)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15209 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 21<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc, MSc, PHD (Following)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(only London)<br>தொ.இ: G/15216 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# மொட்டில் களமிறங்கும் லொஹான் ரத்வத்தே



(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து மீண்டும் அரசியலில் நுழைய தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தே அறிவித்துள்ளார்.

அத்துடன் ஒட்டுமொத்த இலங்கையின் தலைமையையும் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

மஹையாவிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் லொஹான் ரத்வத்தே இதனைத் தெரிவித்துள்ளார். (நி-8)

# மொட்டிலிருந்து விலகினார் பசில் சானக எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை முற்றிலுமாக நிறுத்திவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் அதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, பொதுஜன பெரமுனவின் நடவடிக்கைகளை தற்போது கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மேற்கொண்டு வருவதாகவும் சானக கூறியுள்ளார்.

அத்தோடு, இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலும் பசில் ராஜபக்ச சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார் என்றும் பசில் ராஜபக்ச அனைத்திலிருந்தும் விலகி தற்போது அமெரிக்காவில் தங்கியிருப்பதாகவும் டி.வி. சானக மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3312

**லிபனா**




**லோஜி**




**மாதவி**




**ஜெயதீப்**




**லோசன்**




**துரு**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிர்மாணப்...

தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சம்பூர் நிலத்தில் சூரிய மின் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்கு இரண்டு நாள் விஜயமாக வருகை தரவுள்ளார் என்றார். (ம-7)

## கைதானவருக்கு...

எதிராகத் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெண் வைத்தியரை துஷ்பிரயோகம் செய்த சம்பவத்தில் சந்தேக நபரைக் கைது செய்ய ஐந்து பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதன்படி கலனேவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தாங்கள் உறுதியளித்தவாறு நீதிமன்றத்திற்கு முற்படுத்தி, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (ம-7)

## மோ.சைக்கிள்...

இதில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சௌந்திரநாயகம் பெனாட் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி வீட்டிற்குச் செல்வதற்காக வீதியின் கரையோரமாக நின்றிருந்தபோது, பாண் விற்பனை செய்யும் பெட்டியை ஏற்றி வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்தவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மறுநாள் 9ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (11) உயிரிழந்தார்.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60)

## ஏழாலையில்...

மரணமடைந்தவராவார்.

தனிமையிலிருந்த குறித்த நபர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நிமோனியாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## சந்தேகநபரை...

புதன்கிழமை மாலை உத்தரவிட்டார்.

மருத்துவரிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் அலைபேசியில் இருந்து எடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட அழைப்புகளின் பதிவை வழங்குமாறு தொலைபேசி நிறுவனத்துக்கு நீதவான் உத்தரவிட்டார்.

பொலிஸார் "பி" அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் உண்மைகளைச் சமர்ப்பித்தையடுத்தே நீதவான் குறித்த உத்தரவை பிறப்பித்தார். (ம-7)

## வேலைநிறுத்தப்...

முடிவுக்குக் கொண்டுவருமாறு சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் அடிப்படையில், வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட வைத்தியர்கள் குழு முன்னெடுத்துவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தைக்கைவிடுமாறும்சுகாதார அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

36 மணி நேரத்திற்குள் சந்தேக நபரை நாங்கள் கைது செய்தோம். ஐந்து பொலிஸ் குழுக்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. சந்தேக நபர் இருக்கும் பகுதி தொடர்பில் நேற்று முன்தினம் இரவு எனக்குத் தகவல் கிடைத்தது. அதன்படி விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் நேற்றுக் காலை அவர் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரம் குறித்து இப்போது விசாரணைகள் நடந்து வருகின்றன.

இன்று (நேற்று) காலை நான் அநுராதபுரம் மருத்துவமனை வளாகத்தைச் சுற்றிப் பார்த்தேன். இந்தச் சம்பவத்தால் அங்குள்ள ஊழியர்கள் அச்சமடைந்துள்ளனர். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றார் (ம-7)

## குடும்...

சேர்ந்த குணராசா எட்வேட் லிங்ஸ்ரன் (வயது-45) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## கட்டு...

இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியச்செலாவணி இருப்புகளைக் கொண்டு தற்போது வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## அநு...

வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களும் நேற்று அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டத்தில் பல்வேறு சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை ஏந்தி அவர்கள் பங்கேற்றனர்.

அநுராதபுரம் போதனா மருத்துவமனை [illegible] மருத்துவர்கள், தாதியர்கள், பிற ஊழியர்கள் மற்றும் ரஜரட்ட மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மருத்துவ மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (ம-7)

# சம்மாந்துறையில் ஏழு பேருக்கு விசர்நாய்க்கடி

சம்மாந்துறையில் விசர் நாய்க்கடிக்குள்ளாகி 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று சம்மாந்துறை, செந்நெல் கிராமப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.03.12 — சீட்டிழுப்பு இலக்கம் 5773 — G 5 6 7 5 9 9
அத சம்பத — G 7 5 9 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0348
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.03.12 — சீட்டிழுப்பு இலக்கம் - 1803 — C 39 54 76 82 C — 63781

மெகா பவர் — திகதி 12/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2121 — C 11 10 11 17 78

ஜய JAYA — திகதி 2025.03.12 — சீட்டிழுப்பு இலக்கம் 041 — V 2 0 7 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4015 — சீட்டிழுப்பு திகதி 12.03.2025 — W 10 17 25 58 W

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.12 — சீட்டிழுப்பு இலக்கம் 1082 — மிதுனம் 08 19 22 35 மிதுனம் — 48864 — 07

உத்தியோகபூர்வ முடிவுகள் — 12.03.2025 — வெற்றி வாரம் 481 — 0 — 7 2 4 4 4 9 — 59916 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.33,376,494.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2747 — சீட்டிழுப்பு திகதி 2025.03.12 — தினம் புதன்கிழமை — 12 18 34 37 D — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 91,785,857.60

சனிதா — திகதி 12.03.2025 — வெற்றி வாரம் 4908 — 05 33 42 44 R — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 56,619,205.20 — 89722

ஜயோதா Jayoda — திகதி 2025.03.12 — வெற்றி வாரம் 2111 — 05 08 30 59 C — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 28,347,033.60

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4459 — சீட்டிழுப்பு திகதி 12.03.2025 — தினம் புதன்கிழமை — 09 45 47 54 — துலாம் — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.3,529,148.00 — 148354

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 20 34 44 53 55 — 1923 — 12.03.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.568,257,137.20

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2573 — சீட்டிழுப்பு திகதி 2025.03.12 — 12 44 54 73 G — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.79,159,645.60 — 392084


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வைத்தியம்

வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(922)

## தேவை

சுன்னாகம், திருநெல்வேலி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நெல்லியடி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் 10 பரப்புக் காணி குத்தகை அடிப்படையில் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 723 2535**

(C-2452)

## விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக மூன்று கடைகளும்
2. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக மூன்று கடைகளும்
3. யாழ். ஆஸ்பத்திரி வீதி கஸ்தூரியார் வீதிக்கு முன்பாக மூன்று கடைகளும்
4. யாழ். ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும்
5. யாழ். கஸ்தூரியார் வீதி கபிலா பாட்டா கடைக்கு அண்மையில் 3 கடைகளும்

விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 723 2535**

(C-2452)


யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்

## திருவள்ளுவர் விழா அழைப்பு

இடம் : நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
நாள் : 13.03.2025 வியாழக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.30 மணி

தலைவர் : பேராசிரியர் தி.வேல்நம்பி
தலைவர், யாழ்ப்பாணத் தமிழ் சங்கம்

நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- திருக்குறள் வாழ்த்து : கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவியர்
- வரவேற்புரை : திரு. யோ. நிவேதன்
- தலைமையுரை : பேராசிரியர். தி.வேல்நம்பி
- திருக்குறள் நடனம் : சித்தாகாஸ் நடன நிறுவனம்
  நெறியாள்கை முனைவர் கி. அருட்செல்வி
- சிறப்புரை
  பொருள் : திருக்குறளில் பண்புற மொழிதல்
  வழங்குபவர் : திரு. ந. குகபரன்
  ஆசிரியர் – பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
- திருக்குறள் வினாடிவினா – இறுதிப் போட்டி
  நெறிப்படுத்துநர் : செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்
- பரிசில் வழங்கல் : பேராசிரியர் அ. சண்முகதாஸ்
- தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு திருக்குறள் உரை நூல் கையளித்தல் : முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
  பட்டிமண்டபம்
- பொருள் : இன்றைய தமிழர் செல்நெறி வள்ளுவர் வகுத்தபாதையில்

| பயணிக்கின்றது | இல்லை |
|---|---|
| திருமதி ர. தர்மினி | திரு. தெ. ஹர்சன் |
| செல்வி இ.ஹார்த்தியாயினி | திரு. ஜீவா சஜீவன் |
| திருமதி செல்வதிஅம்மா | திரு. த.கருணாகரன் |

நடுவர்
திரு. ந. விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர், வலம்புரி)

- நன்றியுரை : திரு. லோ. துஷிகரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை
சிவகணேசன் டெக்ஸ்டைல்ஸ், யாழ்ப்பாணம்

## பாராளுமன்ற குழுத் தலைவராக சுகத் வசந்த தேர்வு

(கொழும்பு)

மாற்றுத் திறனாளிகளுக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவராக தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தின் போது, அவரது பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாராட்சி முன்மொழிந்த நிலையில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க அதை வழிமொழிந்தார். (ம-7)


## DMI Jaffna

A/L - 2025 DAY CLASS

திங்கள் – வெள்ளி
(காலை 6 மணி முதல்)


கணக்கீடு – D.Sam
வணிகக்கல்வி – பசில் கேஷோன்
பொருளியல் – M.லிஜிதன்

T.P : 077 848 0604

(3648)


வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 03 - 1982

மறைவு 20 - 02 - 2025

# வடிவேல் சாந்தன்

யாழ்.கலட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வதிவிடமாகவும் கொண்ட வடிவேல் சாந்தவேல் (தம்பி) அவர்கள் (20.02.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வடிவேல் (யாழ்.பிரபல தொழிலதிபர்) - ஜெயவாணி (இலங்கை) தம்பதியரின் அன்பு மகனும் சாந்தரூபன் (ஜேர்மனி), சாந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தரூபி (ஜேர்மனி), சாந்தவரன் (பிரான்ஸ்), சாந்தவிஷ்ணு (பிரான்ஸ்), சாலினி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஜிதா (ஜேர்மனி), சர்மிளா (பிரான்ஸ்), பிரதீபன் (ஜேர்மனி), அஜித்தா (பிரான்ஸ்), சொளன் (பிரான்ஸ்), ரமேஸ்குமார் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திபிதா, நிகாஷ், மீனுதா, அஷ்சியா, சஸ்மியா, ஹரிசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுஷ், தாருஷன், தரணிகா, சஹானா, சைலன், சையானா, சபீஷன், வர்ஷா, அஸ்வினா ஆகியோரின் சித்தப்பாவும் சீத்தா, சவி (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2025) வியாழக்கிழமை பிரான்ஸ் நேரப்படி காலை 9.30 - 11.30 வரை இடம்பெற்று பூதவுடல் 95 Rue Marcel Sembat, 93430 villetaneuse இல் பிரான்ஸ் நேரப்படி மதியம் 12.30 - 13.30 வரை தகனக்கிரியைகள் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடிவேல் (அப்பா) - 077 467 2340 (இலங்கை)
சாந்தகுமார் (அண்ணா) - 061 579 8279 (பிரான்ஸ்)
சாந்தவரன் (அண்ணா) - 076 850 8047 (பிரான்ஸ்)
சாந்தவிஷ்ணு (தம்பி) - 065 175 6937 (பிரான்ஸ்)

தகவல் : சுதன்
(ஓட்டுமடம் - யாழ்ப்பாணம்)

(C-2451)


## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :

**075 033 6759**

(947)

## தேவை

யாழ். பலாலி வீதியில் பலாலி வீதி முகப்புடன் இரண்டு, மூன்று பரப்புக் காணிகள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 723 2535**

(C-2452)

## நல்லூர் விஷ்ணு கோவில்

ஈழத்து அரங்கன் க்ஷேத்திரம்

நித்திய பூஜையினை மேற்கொள்ளக்கூடிய பிராமண அர்ச்சகர் தேவை. சம்பள விடயங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 724 5931**

கச்சேரி நல்லூர் வீதி – தேவஸ்தானம் –

(3651)

## Nature cure & care

பெரிய அரசடி, சாவகச்சேரி

### வேலையாட்கள் தேவை

ஆண் – 01, பெண் – 01

நோயாளர் சிகிச்சைகளிற்கான மத்தனவியலாளர் (Massure) மற்றும் உதவியாட்கள் தேவைப்படுகின்றனர்.

நேரில் வரவும் மாலை 5.00 pm

தொடர்புகளுக்கு : 021 315 7228

(3645)

## கனடாவில் PR வாய்ப்புக்கள்

கனடாவில் MARCH 31 இல் ஆரம்பமாகும் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியேறுவதற்குரிய கற்கைநெறி

CARE GIVER கற்கைநெறி – HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER

கனடாவில் 50,000 க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| கல்வி தகைமை | G.C.E O/L (இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்) |
| கற்கை காலம் | 6 மாதங்கள் |
| கற்கைநேரம் | வார இறுதி நாட்கள் (சனி, ஞாயிறு) |
| வயதெல்லை | 16 முதல் 58 வரை |
| கல்விக்கட்டணம் | 50,000/- |



NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும் (C-2453)

CIMS 49A, CHAPPEL LANE JAFFNA ☎ 0777068777

## UK BUSINESS VISITOR VISA

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET

வர்த்தக கண்காட்சியில்..

உங்கள் வியாபாரத்தினை (பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்

தொடர்புகளுக்கு

V2 TRAVELS ☎ 0777068777

(C-2453)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org